# ஸ்ரீ ராமச்சந்திராவில் இதயத் தசை செயலிழப்பு சிகிச்சை மையம்

**சென்னை, ஜூலை 9:** சென்னை ஸ்ரீ ராமச் சந்திரா மருத்துவமனையில் இதயத் தசை செயலிழப்பு ('ஹார்ட் ஃபெயிலியர்') சிகிச்சை மையம் வியாழக்கிழமை தொடங்கப்பட்டது.

இந்த மையத்தை ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவ பல்கலைக்கழக வேந்தர் வி. ஆர். வெங்கடாசலம் தொடங்கி வைத்தார்.

இந்த சிகிச்சை மையம் தொடர்பாக ஸ்ரீ ராமச்சந்திரா இதய மருத்துவ துறைத் தலைவர் டாக்டர் எஸ். தணிகாசலம், ஸ்ரீ ராமச்சந்திரா பல்கலைக்கழக வருகை தரும் அமெரிக்க இதய மருத்துவ கௌரவ பேராசிரியர்கள் வில்லியம் டோபர் அப்ரஹம், பெஞ்சமின் சன், மோகன் தணிகாசலம் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

'இதயத் தசை செயலிழப்பால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

குறிப்பாக 2020-ம் ஆண்டில் இதயத் தசை செயலிழப்பு காரணமாக சிகிச்சை தேவைப்படுவோரின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதயத் தசை கொஞ்சம் கொஞ்சமாக வலுவிழப்பதற்கு ருமாட்டிக் காய்ச்சல், இதய வால்வுகளில் பாதிப்பு எனப் பல்வேறு காரணங்கள் உள்ளன. அமெரிக்க மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவோரில், 65 வயதுக்கு மேற்பட்ட பெரும்பாலானோருக்கு இதயத் தசை செயலிழப்பு பிரச்னை உள்ளது.

**அறிகுறிகள் என்ன?** மூச்சுத் திணறல், கொஞ்ச தூரம்கூட நடக்க முடியாத அளவுக்கு உடல் சோர்வு, பிரச்னை தீவிரமாகும் நிலையில் கால்களில் வீக்கம் ஆகியவை இதயத் தசை செயலிழப்பின் அறிகுறிகளாகும்.

இதயத் தசை செயலிழப்பு அறிகுறிகளை ஒருவர் புறக்கணிக்கும் நிலையில், தொடர் விளைவாக உயர் ரத்த அழுத்தம் தொடர்பான நோய்கள், சிறுநீரகங்கள் செயலிழப்பு உள்ளிட்டவை ஏற்படலாம். வயிற்றில் வீக்கமும் ஏற்படலாம்.

**தனி சிகிச்சை மையம் ஏன்?** இதயத் தசை செயலிழப்பு நோயாளிகள் மருத்துவமனைக்கு வரும் நிலையில், அவர்களை மற்ற இதய நோயாளிகளுடன் நீண்ட நேரம் காத்திருக்க வைக்காமல் உடனடியாக சிகிச்சை அளிப்பது அவசியம்.

மேலும் இதயத் தசை செயலிழப்புக்கான மூல காரணத்தை உனடியாகக் கண்டுபிடித்தல், பாதிக்கப்பட்டவருக்கு உணவு முறையை எடுத்துக் கூறுதல், எந்த அளவுக்கு உடற்பயிற்சி செய்ய வேண்டும் என நிர்ணயித்தல், நோயாளிக்கு ஆதரவாக இருக்க வேண்டியதன் அவசியத்தை குடும்பத்தினருக்குக் கூறுதல் ஆகியவற்றுக்காக இந்த பிரத்யேக சிகிச்சை மையம் தொடங்கப்பட்டுள்ளது" என்று அவர்கள் தெரிவித்தனர்.

முன்னதாக அமெரிக்க ஓஹியோ அமெரிக்க பல்கலைக்கழகத்தில் இதய அறுவைச் சிகிச்சை நிபுணராக உள்ள டாக்டர் மோகன் தணிகாசலம், அதே பல்கலைக்கழகத்தில் இதய மருத்துவ நிபுணர்களாக உள்ள வில்லியம் டோபர் அப்ரஹம், பெஞ்சமின் சன் ஆகியோருக்கு வருகை தரும் பேராசிரியர்கள் அந்தஸ்தை அளித்து வேந்தர் வி. ஆர். வெங்கடாசலம் கௌரவித்தார்.




சென்னை போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள இதயத் தசை செயலிழப்பு சிகிச்சை மையத்தில் (இடமிருந்து) அமெரிக்க இதய மருத்துவ நிபுணர் வில்லியம் டோபர் அப்ரஹம், இதய மருத்துவ துறைத் தலைவர் டாக்டர் எஸ். தணிகாசலம், ஸ்ரீ ராமச்சந்திரா பல்கலைக்கழக வேந்தர் வி. ஆர். வெங்கடாசலம்.